1982 பிப்ரவரி 17]

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : பேரவைத் தலைவர் அவர்களே, அதே போல் பல மாவட்டங்களில் இருந்து கோரிக்கைகள் வந்து இருக்கின்றன. அவைகளைப் பார்த்து, பரிசீலித்து, முறைப்படி ஒன்றன்பின் ஒன்றாக அரசு நடவடிக்கை எடுக்கும்.

திரு. ப. வெங்கடசுப்பிரமணியம் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் தாலுகாக்கள் எந்த வரைமுறையின்கீழ் பிரிக்கப்படுகின்றன. அதுபோன்று மதுராந்தகம் பகுதியில் எந்தெந்தப் பகுதிகளைப் பிரிக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளது என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : பேரவைத் தலைவர் அவர்களே, அந்தத் தாலுகாக்களிலே இருக்கிற ஜனத்தொகை, அந்தப் பகுதியின் விஸ்தீரணம், அங்கு கிடைக்கும் வருவாய், அதிலே இருக்கிற பின்தங்கிய பகுதி, இவைகளையெல்லாம் எண்ணிப் பார்த்து மக்களுக்கு நன்மை விளைவிக்கும் வகையில் அவைகள் பிரிக்கப்படும்.

புலவர் பட்டம் பெற்ற இடைநிலை ஆசிரியர்களுக்கு ஊக்க ஊதியம் வழங்கும் திட்டம்.

*வினா எண் 225—திரு பாபு ஜனார்த்தனன் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) புலவர் படித்து முடித்த செகண்டரி கிரேடு ஆசிரியர்களுக்கு இரண்டு ஊக்க ஊதிய உயர்வுகள் தரப்படுமா?

(ஆ) ஆம் எனில் அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : (அ) மற்றும் (ஆ) புலவர் தகுதிபெற்ற இடைநிலை ஆசிரியர்களுக்கு ஊக்க ஊதியம் வழங்குவதற்கான கருத்துரு அரசின் பரிசீலனையில் உள்ளது.

(முற்பகல் 9.20)

திரு. பாபு ஜனார்த்தனன்: பேரவைத் தலைவர்களே, வித்வான் படிப்பு முடித்தவர்களுக்கு பி. இடி. ஆசிரியர் தகுதி ஊதியம் வழங்கும் நிலை தற்போது உள்ளது. வித்வான் படித்து

[1982 பிப்ரவரி 17

முடித்த இடைநிலை ஆசிரியர்களுக்குப் பதவி உயர்வு கிடைக்காத நிலையில் ஏன் அவர்களுக்கு ஊக்க ஊதிய உயர்வு வழங்க கூடாது? இனிமேலாவது, பி. ஏ.. பி. இடி., முடித்தால் கிடைத்திடும் ஊக்க ஊதியத்தைப் போல், தமிழ் வித்வான் முடித்திருந்தாலும் அவர்களுக்குக் கிடைப்பதற்கான வழியை அரசு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: மாண்புமிகு தலைவரவர்களே, தற்போதுள்ள ஊக்க ஊதியம் வழங்கும் திட்டத்திற்கான மாற்றுக் கருத்துரு பணியாளர்கள் மற்றும் நிர்வாகச் சீர்திருத்த துறையில்பொதுப் பிரச்னையாகப் பரிசிலனையில் உள்ளது. அப்பொழுது இந்தப் பிரச்னையும் சேர்த்துப் பரிசீலிக்கப்படும்.

திரு. பாபு ஜனார்த்தனன்; பேரவைத் தலைவரவர்களே' நீண்ட நெடுங்காலமாகப் புலவர்களுக்கு இழைத்திருக்கின்ற தீங்கு இது பேரறிஞர் அண்ணா அவர்களின் வழியில்வந்த நாம் தமிழைப் படித்த புலவர்களுக்கு ஊதியம் சம்பந்தப்பட்ட சலுகைகள், அளிப்பதற்கு அரசின் பரிசீலனையில் இனி இருக்கக்கூடிய கருத்துக்கள் என்ன என்பதை அமைச்சரவர்கள் அறிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: மாண்புமிகுதலைவரவர்களே, இப்பொழுது ஊக்க ஊதியம் என்று சொல்லிக் கொண்டு, இன்க்ரிமெண்டு தந்து கொண்டிருக்கிறோம் இன்க்ரிமெண்டிற்குப் பதிலாக வேறு ஏதாவது ஒரு முறையைப் பின்பற்ற முடியுமா என்கின்ற கருத்தைதான் அவர்கள் பரிசீலித்துக் கொண்டிருக்கிறார்கள். அது என்ன என்கின்ற விவரம் என்னிடத்திலே இல்லை. அப்பொழுது இந்தப் பிரச்சினையும் சேர்த்துப் பரிசீலிக்கப்படும். அந்த மாற்றுத் திட்டம் வந்ததற்குப் பிறகு அந்த அடிப்படையில் இதை நாம் பரிசீலிக்கலாம்.

திரு மா. சின்னராசு: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, செகண்டரி கிரேடு பயிற்சி பெற்ற ஆசிரியர்களுக்குத் தமிழ் வித்வான் பயிற்சி பெற்ற பிறகு புரமோஷன் கொடுக்கின்ற காரணத்தினால் வெளியில் வித்வான் பட்டம் படித்தவர்களும், பி.ஏ. போன்ற தமிழ்பட்டம் படித்தவர்களும் வேலைக்கு சேர்வதற்கு வாய்ப்பு குறைகிறது என்பதை அரசு அறியுமா? அதை தவிர்ப்பதற்கு ஏற்கனவே வேலையில் இருக்கின்ற செகண்டரி கிரேடு ஆசிரியர்களுக்குப் புரமோஷன் கொடுப்பதற்கு முன்னால் வெளியில் வேலையில்லாமல் இருக்கின்ற தமிழ் பட்டதாரிகளுக்கு வேலையில் முன்னுரிமை கொடுக்க அரசு முன் வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: மாண்புமிகு தலைவரவர்களே, அதுகுறித்த முழு விவரம் என்னிடத்தில் இல்லை என்றாலும் வெளியில் இருப்பவர்களுக்கும் ஒரு குறிப்பிட்ட சதவீதத்தை நாம் ஒதுக்கி அவர்களுக்கும் வாய்ப்பு தருகிறோம்.

1982 பிப்ரவரி 17]

திரு. சே. இராமலிங்கம்: பேரவைத் தலைவரவர்களே, நடு நிலைப் பள்ளிகளில் தமிழாசிரியர்களை நியமிக்கும்பொழுது அப்பள்ளிகளில் செகண்டரி கிரேடு ஆசிரியர்களாகப் பணியாற்றுகின்றவர்களை.–புலவர் பட்டம் பெற்றவர்கள் அல்லது பி.லிட். தேர்வு பெற்றவர்களைச் சீனியாரிட்டி அடிப்படையில் நியமனம் செய்கிறார்களா? அல்லது நேரடியாக நியமிக்கப் படுகிறார்களா? தற்பொழுது தஞ்சை மாவட்டத்தில் பல்வேறு நடு நிலைப் பள்ளிகளில் நேரடியாக நியமிக்க வேண்டுமென்று அரசு உத்தரவு பிறப்பித்துள்ளத கக் கூறப்படுகிறது. அதை மாற்றி அந்த பள்ளியிலே பி.லிட். தேர்வு பெற்றவர்கள் அல்லது புலவர் பட்டம் பெற்றவர்களுக்கு முன்னுரிமை கொடுத்து சீனியாரிட்டி அடிப்படையில் நியமிக்க ஏற்பாடு செய்யப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: பேரவைத் தலைவரவர்களே, சீனியாரிட்டி பிரகாரம் புரமோஷன் தருவது ஒருபக்கம் இருக்கிறது, அதேநேரத்தில் வெளியிலே படித்து வேலை வாய்ப்பு இல்லாமல் இருப்பவர்களை பொறுத்தவரையில், இப்படி முழுவதையும் சீனியாரிட்டி அடிப்படையில் என்று வைத்து விட்டால் அவர்களுக்கு எந்தக் காலத்திலும் வேலை கிடைக்காது. ஆகவே ஒரு குறிப்பிட்ட சதவீதத்தை வெளியிலேயிருந்து எடுப்பதற்கு ஒதுக்கியிருக்கிறோம். மற்றப்படி புரமோஷன் இருக்கிறது.

Memorandum received from the Thanjavur District Teacher pensioner's Association

*Q. No. 226: THIRU R. UMANATH: Will the Hon. the Minister for Education be pleased to state:

(a) whether the Government have received any memorandum (or Charter of demands) dated 16-3-1981 from the Thanjavnr District Teacher pensioner's Association

(b) if so the action taken by the Government.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: (அ) ஆம்

(இ) கம்யூடேஷன் (commutation) தொகையை 10 ஆண்டுகளுக்குப்பின் மேலும் ஒய்வூதியத்திலிருந்து பிடித்தம் செய்யாமல் முழு ஒய்வூதியத்தையும் அளிப்பது என்பது இவர்களின் கோரிக்கைகளில் ஒன்று. இக்கோரிக்கையைப் பொறுத்தவரை, ஒருவர் எந்த தேதியில் கம்யூடேஷன் செய்திருந்தாலும் அதை கணக்கில் எடுக்காமல், 1–4–81ல் ஒய்வு பெற்று 15ஆண்டுகள் ஆகியிருந்தால் அவர் முழு ஒய்வூதியத்தையும் பெறலாம் என அரசு ஆணை வெளியிட்டுள்ளது. பணியிலுள்ள அரசு ஊழியர்களுக்கு அளிக்கப்படுவது போன்று கிராக்கிப்படி